## தேசிய கல்வி நிறுவகம் -2013

தேசிய கல்வி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை தேசிய கல்வி நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 2009 யூன் 01 ஆம் திகதிய 30(I) ஆம் மற்றும் 30(II) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | 1,365,904 | நிறுவகத்தின் நிறைவேற்றுத் தரம் தவிர்ந்த ஏனைய உத்தியோகத்தர் களின் சம்பள மீயாய்வு மேற்கொள்ளப்படுகையில் தெரிவுக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 31 உத்தியோகத்தர்களில் 29 பேருக்காக 2009 சனவரி 01 ஆம் திகதி முதல் 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை ரூபா 1,209,220 தொகையான சம்பளம் அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இதன் அடிப்படையில் ரூபா 156,684 தொகையான ஊழியர் சேமலாப நிதியம் அனுப்பப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2006 யூலை 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2007 பெப்ரவரி 23 ஆம் திகதிய என்எஸ்சீசீ/பீஓ/01/33 ஆம் இலக்க தேசிய சம்பளங்கள் மற்றும் சேவைகள் ஆணைக்குழு கடிதம் | 114,980 | 148 பதவிநிலை உத்தியோகத்தர்களில் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைக்கு உட்பட்ட ஓய்வு பெற்ற பதவிநிலை உத்தியோகத்தருக்காக ரூபா 96,480 தொகையான சம்பளமும் ரூபா 18,500 தொகையான ஓய்வூதிய பணிக்கொடைத் தொகையும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஏற்பட்ட நிதி விளைவு ரூபா 36,496,150 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 14,654,153 ஆகக் காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் போது அரசாங்க மானியத்திற்காக கணக்கீட்டுக் கொள்கையின் பிரகாரம், பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 49,281,011 தொகை

இனங்காணப்பட்டிராமையால் ஏற்பட்ட தவறு 2013 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் காண்பிக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டின் ஒப்பீட்டுத் தொகைகள் மீள்மதிப்பீட்டின் படி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் படி நிதி விளைவுகளில் ரூபா 21,841,997 தொகையான சாதகமான நிலை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இம் முரணிற்கு செயற்பாட்டு வருமானம் ரூபா 50,636,600 ஆல் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தது.

### 3.2 நிறுவகத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்ட நடவடிக்கைகள்

03 உத்தியோகத்தர்களால் ஒழுங்கீன நடவடிக்கைகளுக்காக சேவை இடைநிறுத்தம் மற்றும் ஆசிரியப் பயிற்சிச் சான்றிதழ்கள் பெறப்படுதல் தொடர்பாக நிறுவகத்திற்கு எதிராக நீதிமன்றங்களில் 03 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

### 3.3 செலவினங்களின் வழமைக்கு மாறான அதிகரிப்பு

2013 ஆம் ஆண்டின் செலவினங்கள் 2012 ஆம் ஆண்டிற்கான செலவினங்களுடன் ஒப்பிடப்படுகையில் பின்வரும் முரண்கள் அவதானிக்கப்பட்டன.

| செலவின விபரம் | 2013 | 2012 | முரண் | முரண்களின் சதவீதம் |
|---|---|---|---|---|
| நானாவித செலவினம் | 3,964,184 | 969,726 | 2,994,458 | 309 |
| தொலைபேசிக் கட்டணம் | 3,156,145 | 1,645,426 | 1,510,719 | 92 |
| செயலமர்வு – எரிபொருள் செலவினம் | 131,374 | 69,871 | 61,503 | 88 |
| சுத்திகரிப்பு சேவைகள் | 8,065,524 | 5,483,419 | 2,582,105 | 47 |
| தபால் கட்டணம் | 1,072,470 | 728,164 | 344,306 | 47 |
| விளம்பரம் | 1,596,123 | 1,184,714 | 411,409 | 35 |
| நீர் வழங்கல் கட்டணம் | 1,000,735 | 774,089 | 226,646 | 29 |

இம் முரண்களுக்கு பொருட்களின் விலை அதிகரிப்பு, செஸ் வரி, மின்சாரக்கட்டண அதிகரிப்பு, எரிபொருள் கட்டண அதிகரிப்பு மற்றும் வழங்கப்படும் கேள்விக்காக விலைகள் அதிகரித்தல் என்பன காரணமாகியிருந்ததாக பணிப்பாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

### 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

நிறுவகத்தில் பணியில் ஈடுபட்டுள்ள 06 உத்தியோகத்தர்களுக்கு கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டிற்குச் சென்று மீண்டும் சேவைக்குத் திரும்பாமையால் உடன்படிக்கை மீறப்பட்டமையால் ரூபா 11,699,587 கூட்டுத்தொகை நிறுவகத்திற்கு அறவிடப்படுவதற்காக தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு 04 ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகள் வரையான காலப்பகுதி கடந்திருந்தது.

### 4.3 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிற்றுண்டிச்சாலைக்காக நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகையில் 2006 அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கைநூலிற்கு இணங்க வழங்குனர்கள் முறையான வகையில் பதிவு செய்யப்பட்டிராமையால் போட்டி விலையில்

பொருட்கள் கொள்வனவு செய்யப்பட இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டதன் காரணமாக ஏறத்தாழ ரூபா 1,366,126 தொகையான நிதிசார் நட்டம் ஏற்பட்டிருந்தது. இவ்வாறே உணவுத் தயாரிப்பின் போது குறிப்பான உணவுப் பட்டியல் தயாரிக்கப்படாது ஒரு நபரின் நுகர்வின் அளவு தொடர்பாக கருத்திற்கொள்ளப்படாது உணவுப் பொருள் கொள்வனவின் காரணமாக நுகர்வுப் பொருட்கள் கூடியளவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 1,067,595 தொகையான நட்டம் நிறுவகத்திற்கு ஏற்பட்டிருந்தது. உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தற்போதைய முறைமையில் உள்ள நலிவுகள் சீராக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் வருமானத்தை 13 சதவீதம் அதிகரிப்பதற்கும் செலவினத்தை 23 சதவீதத்தால் குறைப்பதற்கும் இயன்றதாக பணிப்பாளர் நாயத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சிற்றுண்டிச்சாலைக்காக நுகர்வுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்குனர்களுக்குக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் உரிமையாளருக்கு அல்லது அவருடைய வியாபாரப் பெயருக்குப் புறம்பான நபர் ஒருவருக்கு 112 சந்தர்ப்பங்களின் போது ரூபா 4,245,925 பெறுமதியான காசோலை வழங்கப்பட்டிருந்தது.

### 4.4 பதவியணி நிர்வாகம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணியுடன் ஒப்பிடப்படுகையில் பின்வரும் ஊழியப் பற்றாக்குறை மற்றும் மிகை அவதானிக்கப்பட்டது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | நிறைவேற்று நிலை | 108 | 61 | 47 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 200 | 92 | 108 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 223 | 178 | 45 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 121 | 106 | 15 | - |
| (v) | ஏனையவை (அமைய, தற்காலிகமான, ஒப்பந்த அடிப்படை) | - | 29 | - | 29 |
| | கூட்டுத்தொகை | 652 | 466 | 215 | 29 |

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான வரைபு நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 28 ஆம் திகதியும் இறுதி நிதிக்கூற்றுக்கள் 2014 மே 29 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2013 ஆம் ஆண்டில் உள்ளபடியான செலவினங்கள், பாதீடு செய்யப்பட்ட பெறுமதியுடன் ஒப்பிடப்படுகையில் 24 சதவீதத்திலிருந்து 356 சதவீதம் வரையான முரண்கள்

அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) சிற்றுண்டிச்சாலைக் கொள்வனவுகள்
(ஆ) சிற்றுண்டிச்சாலை உள்ளகக் கட்டுப்பாடு
(இ) கணக்களிப்பு முறை
(ஈ) காசு மற்றும் வங்கி
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஊ) கொள்வனவு நடைமுறைகள்
(எ) இருப்புக் கட்டுப்பாடு